1982 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அந்த இடத்தில் தொடங்குவதாக இருந்தது. ஆனால் அந்த இடம் எந்த இலாகாவுக்குச் சொந்தம் என்பதிலே பிரச்சனை எழுந்து, குறிப்பாக அந்த இடம் வன இலாகாவுக்குச் சொந்த மானாதா அல்லது வருவாய்த் துறைக்குச் சொந்தமானதா என்ற பிரச்சனை ஏற்பட்டு, வன இலாகா என்று கருதி அதற்கு மத்திய சர்க்காரிடம் ஒப்புதல் பெறுவதற்கு சிக்கல் இருந்த காரணத்தால் சிக்கலை வைத்துக்கொண்டு தொழிற் சாலையைக் தொடங்கக்கூடாது, சந்தேகத்தோடு தொடங்கக் கூடாது என்று கருதி எச்சரிக்கையாக இருக்கக் கருதி, அந்த இடத்திற்கு நானே சென்ற பிறகு, சந்தேகம் என்ற பிறகு, நடத்தக் கூடாது என்று கருதி, பிறகு அரசு சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஏப்ரல் மாதம் அந்தத் தொழிற் சாலை முழுமையாகத் தொடங்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஒட்டுப்பலகை தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். அந்த தொழிற் சாலையை குறுகிய காலத்தில் கட்டிமுடிக்க அங்கே 'கன்ஸ்ட் ரக்ஷன்' பிரிவு இல்லை என்ற காரணத்தால், அங்கே ஒரு 'சப்-டிவிஷன்' ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு, அந்தத் தொழிற்சாலையை விரைவாகத் தொடங்க அரசு ஆவன செய்யும்.

Tirunelveli–Tuticorin Road as a National Highway.

* Q. No. 567—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Tirunelveli–Tuticorin Road is to be made a National Highways;

(b) whether the Central Government are to widen the road; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு : (அ), (ஆ) மற்றும் (இ) திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு பாளையங்கோட்டை வழியாகச் செல்லும் சாலை தற்போதுள்ள தேசிய நெடுஞ் சாலையாகும். திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டை

முடிய தேசிய நெடுஞ்சாலை 7, பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி முடிய தேசிய நெடுஞ்சாலை 7-எ ஆகும். தேசிய நெடுஞ்சாலை 7ஏ-இல் சாலை வளைவுகளை நோக்கி மேம்பாடு செய்தல், சாலையின் போக்கை திருத்தி அமைத்தல் ஒருவழிப் பாதையை இரு வழிப்பாதையாக அகலப்படுத்துதல், மேம்பாடு திட்டங்கள் இந்திய அரசுக்கு ஆறாவது திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசு சில பணிகளுக்கு ஒப்புதலளித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் விரிவுபடுத்துவதன் காரணமாகவும், தூத்துக்குடியில் அண்மைக்காலத்தில் பல முக்கியத் தொழில்கள் தொடங்கப்பட்டு இருப்பதன் காரணமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகரத்தில் இருந்து அந்த தேசிய நெடுஞ்சாலை செல்வதாலும் அந்த தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வளைவுகளை நேராகவும், அந்தச் சாலையை விரிவுபடுத்தவும், மைய அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விரிவுபடுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பல்வேறு வேலைகள் அந்த 7-ஏ என்ற தேசிய நெடுஞ்சாலையில் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1 கோடியே 60 லட்சம் ரூபாய் 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

தருமபுரி நகராட்சியால் வாங்பெற்ற இரும்புத் தொட்டிகள்.

*வினா எண். 568—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி நகராட்சியில் 1970-ம் ஆண்டு வாங்கப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள இரும்பால் செய்யப்பட்ட டேங்குகள் பயன்படுத்தப்படாமல் அழிந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) 1969—ம் ஆண்டு தர்மபுரி நகராட்சியில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 95,770 செலவில் இரண்டு இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் வாங்கப்பட்டு, நகரில் பாதுகாக்கப்பட்ட